**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**

*******

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண்.85/2025**
**CNR No.TNMY06-000153-2025**

சௌந்தர்ராஜன் ....வாதி

...எதிர்...

பிரபு .....பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என் முன்பாக 10.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ. சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைப்பாணை பெற்றுக்கொண்டு நீதிமன்றம் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கபட்டு, வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

**1.** இவ்வழக்கானது பிரதிவாதியிடமிருந்து தாவா தொகை ரூ.1,88,450/-, பின்வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் வசூலிப்பதற்காக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதியின் வழக்குரைச் சுருக்கம்:**

பிரதிவாதி, வாதியின் குடும்ப நண்பர். வாதியிடம், பிரதிவாதி குடும்ப செலவிற்காகவும் மற்றும் இதர செலவிற்காகவும் 01.02.2023 ம் தேதி ரூ.1,50,000/- கடனாக பெற்றுக் கொண்டு வாதிக்கு சாட்சிகள் முன்னிலையில் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி பிராமிசரி நோட்டில் மாதம்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.18 16:56:43 +0530

ஒன்றுக்கு ரூ.100/-க்கு ஒரு ரூபாய் வட்டி வீதம் அசல் மற்றும் வட்டியுடன் திரும்ப தருவதாக ஒப்புக்கொண்டு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளார். வாதி பிராமிசரி நோட்டுபடி தாவா தொகையை பலமுறை கேட்டும், அசல் வட்டி தொகையை கொடுக்காததால் 20.01.2025ம் தேதியில் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார். அதை பெற்றுக் கொண்டு பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுக்காமல் வாதிக்கு கொடுக்க வேண்டிய தாவா தொகையையும் கொடுக்கவில்லை. எனவே தாவா தொகை திரும்ப பெற்று தருமாறு கேட்டு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. **இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்:**

இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியதா? என்பதேயாகும்.

**4.** வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி நீதிமன்றம் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

**5. தீர்வு:**

வாதி தரப்பு வழக்கானது பிரதிவாதி, வாதியின் குடும்ப நண்பர் என்றும், வாதியிடம், பிரதிவாதி குடும்ப செலவிற்காகவும் மற்றும் இதர செலவிற்காகவும் 01.02.2023ம் தேதியில் ரூ.1,50,000/- கடனாக பெற்றுக் கொண்டு வாதிக்கு சாட்சிகள் முன்னிலையில் மேற்படி தாவா தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ஒரு ரூபாய் வட்டி வீதம் அசல் மற்றும் வட்டியுடன் திரும்ப தருவதாக ஒப்புக்கொண்டு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளதாகவும், பிராமிசரி நோட்டுபடியான அசல் மற்றும் வட்டி தொகையை பலமுறை கேட்டும், பிரதிவாதி கொடுக்காததால் 20.01.2025ம் தேதியில் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து அதை பெற்றுக் கொண்டும் பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுக்காமலும், வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகையும் கொடுக்கவில்லை என்பதால் தாவா தொகையை பின் வட்டியுடன்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.18 16:56:49 +0530

பிரதிவாதி கொடுக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. வழக்குரை சங்கதிகளை நிரூபிக்க வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் 01.02.2023 தேதியில் ரூ.1,50,000/- வாதியிடம் கடனாக பெற்றுக் கொண்டு பிரதிவாதி சாட்சிகள் முன்னிலையில் வாதிக்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், பிராமிசரி நோட்டின் அசல் மற்றும் வட்டி தொகையை திரும்ப செலுத்தக் கோரி பிரதிவாதிக்கு வாதி கொடுத்த 20.01.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு, அஞ்சல் ரசீது மற்றும் அஞ்சல் சார்வுக்கான ரசீது வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதி நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக் கொண்டும் வழக்குரை சங்கதிகளை மறுத்துரைக்க முன்வராமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1ன் படி பிரதிவாதி, வாதியிடம் ரூ.1,50,000/- கடன் பெற்றுள்ளார் என்பதும், மேற்படி தொகை மற்றும் வட்டி செலுத்ததால் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து அதை பெற்றுக்கொண்டும் தாவா கடன் தொகையை பிரதிவாதி கொடுக்கவில்லை என்பது வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வாதி இவ்வழக்கை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபித்துள்ளார் என்பதால் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று தீர்மானித்து இவ்வழக்கின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. **முடிவாக** இவ்வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு பிரதிவாதி தாவா தொகையான ரூ.1,88,450/- மற்றும் அசல் தொகையான ரூ.1,50,000/-த்திற்கு வழக்குரை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை 6% பின் வட்டியுடன் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.18 16:56:54 +0530

சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.18 16:56:58 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

**வாதி தரப்பு சாட்சி**
வா.சா.1 திரு. சௌந்தர்ராஜன் ( வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.02.2023 | கடன் உறுதி சீட்டு அசல் |
| வா.சா.ஆ.2 | 20.01.2025 | வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 20.01.2025 | அஞ்சல் ரசீது |
| வா.சா.ஆ.4 | 14.02.2025 | அஞ்சல் துறை டெலிவரி ரசீது |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் – இல்லை**

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் – இல்லை**

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.18 16:57:02 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

நேரிய / வரைவு தீர்ப்புரை
அசல் வழக்கு எண். 85/2025
நாள் – 18.04.2026